

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம் மெய்யூர் ஓடை ஊராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து, மனுக்கள் பெற்றார். இதில் ஒன்றிய செயலாளர் டி. குமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் சுப்பம்மாள், சுந்தரமூர்த்தி, தாமோதரன், சுந்தரமூர்த்தி, முனுசாமி, நாகம்மாள் மாரி,கோமளா ஐயப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றியக் குழு துணை பெருந்தலைவர் வசந்தி குமார் வரவேற்றார். மாவட்ட செயலாளர் க.சுந்தர் ஜாதிச் சான்று, இருப்பிடச் சான்று, வருமானச் சான்று ஆகிய மனுக்களை உடனடியாக பெற்று பரிசினை செய்து சான்றிதழ்களை பொது மக்களுக்கு உடனடியாக வழங்கி ஆயிரம் பேருக்கு மத்திய உணவு பரிமாறினார். இதில் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் சிவராமன், சேகர், ஒன்றிய நிர்வாகிகள் கார்த்தி, பாலமுருகன், வெங்கட்ராமன், முரளி, ரத்தினமாலா, உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி 20வது வார்டில் கட்டப்பட்ட நியாய விலை கடை(ரேஷன் கடை) கட்டிடத்தை மாவட்டக் கழக துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ. பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் அப்பொழுது பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ. எஸ். பெர்னாார்ட் மாமன்ற உறுப்பினர் சே. முத்துக்குமார் வட்டக் கழகச் செயலாளர் முருகையன் என்கிற சங்கீத்குமார் மாநகராட்சி அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்

## 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

# கரூரில் 20 பயனாளிகளுக்கு உடனடியாக நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

கரூர், ஆக 1-

கரூரில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில், 20 பயனாளிகளுக்கு உடனடியாக நலத்திட்ட உதவிகளை சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.

கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி கரூர் மாநகராட்சி வார்டு எண்-11 மற்றும் 20 பகுதிகளுக்கு நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்களில் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல் தலைமையில், 20 பயனாளிகளுக்கு ரூ. 15.48 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர் வி.செந்தில் பாலாஜி கூறியதாவது:-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து கரூர் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டத்தில் 15.07.2025 முதல் வரும் செப்டம்பர் மாதம் வரை நகர்ப்புற பகுதிகளில் 78 முகாம்களும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 101 முகாம்களும் என மொத்தம் 179 சிறப்பு முகாம்கள் மூலம் பொது மக்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்படவுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள கடைக்கோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு அருகாமையிலேயே சென்று வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தில் பெறப்படும் மனுக்கள் அனைத்திற்கும் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்கள்.

கரூர் மாவட்டத்தில் 25-07-2025 வரை நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பல்வேறு துறைகளின் சார்பில் 13.894 கோரிக்கை மனுக்களும் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கோரிக்கை விண்ணப்பமாக 8,635 விண்ணப்பங்கள் என மொத்தம் 22,529 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக இன்று 29.07.2025 கரூர் மாநகராட்சி வார்டு எண் 11 மற்றும் 20 உட்பட்ட பகுதிகளுக்கு கரூர் வாசவி மஹாலில் முகாம் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் இன்றைய தினம் பொதுமக்கள் வழங்கிய மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டு கரூர் மாநகராட்சியின் சார்பாக 6 நபர்களுக்கு பிறப்புச் சான்று. இறப்புச் சான்று மற்றும் சொத்து வரி பெயர் மாற்றத்திற்கான ஆணைகளையும். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பாக 8 பயனாளிகளுக்கு வகுப்புச் சான்று வருமானச் சான்று மற்றும் பிறப்பிடச் சான்று உள்ளிட்ட சான்றிதழ்களையும், எரிசக்தி துறையின் சார்பாக 1 நபருக்கு மின் இணைப்பு பெயர் மாற்றத்திற்கான ஆணைகளையும்.

கரூர் நகர கூட்டுறவு வங்கியின் சார்பாக ரூ. 9.இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் சுய உதவிக்குழு கடனுதவியும். ரூ. 50,000 மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளி கடனுதவியும் மற்றும் ரூ. 4.98 இலட்சம் மதிப்பீட்டில் வீட்டு அடமானக் கடனுதவியும். தாட்கோ மூலம் 2 பயனாளிகளுக்கு ஆடு வளர்ப்பு மற்றும் கறவை மாடு வளர்ப்பு திட்டத்தின் கீழ் தலா ரூ. 50,000 மானியமாகவும் என மொத்தம் 20 பயனாளிகளுக்கு ரூ. 15,48 இலட்சம் மதிப்பீட்டிவான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என கூறினார்.

இம்முகாமில் மாநகராட்சி மேயர் வெ. கவிதா, மாநகராட்சி ஆணையர் கே.எம். சுதா, மண்டலக்குழு தலைவர் எஸ்.பி. கனகராஜ், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## புதுச்சேரியில் 10054 மாணவர்கள் இடைநிற்றல்,

# ஒன்றிய கல்வித்துறை அமைச்சரின் அறிக்கைக்கு பொறுப்பேற்பது யார்?

## புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா கண்டன அறிக்கை!



புதுச்சேரி, ஆக. 1-

புதுச்சேரி மாநிலத்தில் கல்வித்துறையின் பரிதாபகரமான நிலையையும், மாணவர்களின் பள்ளி இடைநிற்றல் பிரச்சனையையும் ஒருங்கிணைந்து வெளிப்படுத்தும் வகையில், ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களின் கடிதம், ஆளும் பாஜக கூட்டணி புதுச்சேரி அரசின் அவலநிலையையும், கல்வித்துறை அமைச்சர் நமச்சிவாயத்தின் ஆற்றாமையையும், திறமையின்மையையும் அம்பலப்படுத்தியுள்ளது. இந்தக் கடிதம், புதுச்சேரியில் சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தின் படுதோல்வியை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இதனை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஒன்றிய கல்வி அமைச்சரின் கடிதம், புதுச்சேரியில் 10054 மாணவர்களின் பள்ளி இடைநின்றிருக்கிறார்கள் என்ற தகவல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கல்வித்துறையில் தரமான கல்வியை வழங்குவதற்கு அரசு தவறிவிட்டதையும் தெளிவாக எடுத்துரைக்கிறது. இது, அமைச்சர் நமச்சிவாயத்தின் தலைமையின் கீழ் இயங்கும் கல்வித்துறையின் அலட்சியப் போக்கையும், திட்டமிடல் இன்மையையும் பறைசாற்றுகிறது. சிபிஎஸ்இ பாடத்திட்டத்தை அவசரகதியில் அறிமுகப்படுத்தியது, மாணவர்களுக்கு உகந்த கற்றல் சூழலை உருவாக்குவதற்கு மாறாக, கல்வியில் குழப்பத்தையும், மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும் அபாயகரமான சூழலை உருவாக்கி மாணவர்கள் ஆர்வத்துடன் கல்வி கற்கும் வாய்ப்பினை நூதனமாக மறுத்து உயர் கல்விக்கு முட்டுக்கட்டையாக தேசிய கல்விக் கொள்கை உள்ளது என தொடர்ந்து சாடியிருக்கிறேன். சிபிஎஸ்இ சாதனைகள் குறித்தும் மாணவர்கள் தேர்ச்சி விகிதம் குறித்தும் வெள்ளை அறிக்கை வெளியிட வலியுறுத்தினேன். இதனை எதையும் பொருட்படுத்தாமல் மௌனம் காக்கும் புதுச்சேரி கல்வித்துறையின் லட்சணம் தற்போது ஒன்றிய அரசால் அம்பலம் ஆகியுள்ளது.

சிபிஎஸ்இ பாடத்திட்டத்தை திறம்பட செயல்படுத்துவதற்கு தேவையான உள்கட்டமைப்பு, ஆசிரியர் பயிற்சி, மற்றும் மாணவர்களுக்கு ஏற்ற வளங்களை உருவாக்குவதில் புதுச்சேரி அரசு முற்றிலும் தோல்வியடைந்துள்ளது. இதன் விளைவாக, ஆயிரக் கணக்கான மாணவர்கள் கல்வியை இழந்து, பள்ளி இடைநிற்றலுக்கு உள்ளாகியுள்ளனர். இது, கல்வி அமைச்சர் நமச்சிவாயத்தின் நிர்வாகத் திறனின்மையையும், மாணவர்களின் எதிர்காலத்தைப் பற்றிய அக்கறையின்மையையும் வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது.

மேலும், ஒன்றிய அமைச்சரின் கடிதம், புதுச்சேரி அரசின் கல்வித்துறை நிர்வாகத்தில் உள்ள கடுமையான குறைபாடுகளை உலகறியச் செய்துள்ளது. சிபிஎஸ்இ பாடத்திட்டத்தின் தோல்வி, மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதற்கு மாறாக, அவர்களை கல்வி வெளியிலிருந்து விலக்கி, சமூக மற்றும் பொருளாதார பின்னடைவுக்கும், குழந்தை தொழிலாளர்களாகவும், பாலியல் தொந்தரவுகளுக்கும் ஆளாக்கி உள்ளது. இதற்கு முழு பொறுப்பையும் நமச்சிவாயம் ஏற்று, மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும்.

புதுச்சேரியின் மாணவர்களின் கல்வி உரிமையைப் பாதுகாக்கவும், சிபிஎஸ்இ பாடத்திட்டத்தின் தோல்வியால் ஏற்பட்ட பாதிப்புகளைச் சரிசெய்யவும், உடனடியாக மாநில அரசு தலையிட வேண்டும். மாணவர்களின் நலனை மையமாகக் கொண்டு, ஆசிரியர்களுக்கு முறையான பயிற்சி, பள்ளிகளுக்கு தேவையான உள்கட்டமைப்பு, மற்றும் மாணவர்களுக்கு ஏற்ற கற்பித்தல் முறைகளை உருவாக்க வேண்டும். இவை நிறைவேற்றப்படாவிட்டால், புதுச்சேரியின் கல்வித்துறை மேலும் சீரழிந்து, எதிர்கால தலைமுறையின் கனவுகள் சிதைவடையும்.

புதுச்சேரி மாணவர்களுக்கு டைப் 2 நீரழிவு நோய் அதிகரித்துள்ளது என ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். அட்சய பாத்திரா மதிய உணவு திட்டத்தின் மூலம் வெங்காயம் பூண்டு சேர்க்காமல் சமைக்கப்பட்ட உணவில் போதிய சத்துக்கள் இல்லை என்பதும் உறுதியாகிறது. மாணவர்களுக்கு சத்தான உணவினை வழங்க முடியாத புதுச்சேரி அரசை வன்மையாக கண்டிக்கிறேன்.

அமைச்சர் நமச்சிவாயத்தின் ஆற்றாமையையும், சிபிஎஸ்இ பாடத்திட்டத்தின் படுதோல்வியையும் மறைக்க முடியாது. மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்க, உடனடியாக இந்தப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். புதுச்சேரி மாணவர்களின் நலனுக்காக, இந்த அரசின் அலட்சியப் போக்குக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுப்போம்.

இவ்வாறு அவர் அறிக்கை விடுத்துள்ளார்.

## இளைஞரணி மாநில துணைச் செயலாளர் அப்துல் மாலிக், எம்.எஸ்.கணேஷ்குமார் பங்கேற்பு!

# கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் சி.வெ.கணேசன், சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

கடலூர், ஆக. 1-

கடலூர் மேற்கு மாவட்ட திமுக இளைஞரணி ஒன்றிய,நகர,பேரூர் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம், 29.7.2025,செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில், நெய்வேலி என்.எல்.சி.,தொ.மு.ச கலைஞர் அரங்கத்தில் நடைபெற்றது.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர், கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் சி.வெ.கணேசன் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார்.

நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா .இராஜேந்திரன் ,மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக் முன்னிலை வகித்தனர். கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ்குமார் வரவேற்புரையாற்றினார்.

கூட்டத்தில் அமைச்சர் சி.வெ. கணேசன் பேசுகையில், இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சராக நமது கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் சிறப்பான ஆட்சியில் தமிழ்நாடு அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் அடைந்துள்ளது.

வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் திமுக மிகப்பெரிய வெற்றியை பெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும் சூழல் உருவாகி உள்ளது.

கடலூர் மேற்கு மாவட்டத்தில், ஒன்றிய,நகர, பேரூர், கிளை, வார்டு ஆகிய பகுதிகளில் இளைஞர் அணி நிர்வாகிகளை நியமிக்க வேண்டும்.

ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையில் இளைஞர்களை அதிகளவில் சேர்த்து கழகத்தை பலப்படுத்த வேண்டும் என பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் ஜி.தண்டபாணி, முன்னாள் எம்.எல்.ஏ ,கலைச்செல்வன், ஒன்றிய கழக செயலாளர்கள் பட்டூர் அமிர்தலிங்கம், செங்குட்டுவன், தி.வேல்முருகன், கனக .கோவிந்தசாமி, அ.குணசேகரன், ஆர்.சந்தோஷ் குமார் ,முடப்புளி ஆசை தம்பி,

நகர கழக செயலாளர்கள் கே. இராஜேந்திரன் கா .தண்டபாணி, ப.மணிவண்ணன்,வி.குருநாதன், வி. பி. பி. பரமகுரு, கழக பொதுக்குழு உறுப்பினர் என்.பலராமன், பேரூர் கழக செயலாளர் ஜெயமூர்த்தி, கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.ராஜேஷ், செல்வ. துரைராஜ், தங்க. நாராயணசாமி, ஆ.சதாம், பாரதி ராஜா, முகமது பாசில், மற்றும் பண்ருட்டி, நெய்வேலி, விருதாச்சலம், திட்டக்குடி சட்டமன்ற தொகுதி,ஒன்றிய,நகர, பேரூர், இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கலந்து கொண்டனர்.




விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஒன்றியம் கூட்டேரிப்பட்டு ஊராட்சியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பழக்கன்றுகளை வழங்கினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ்ச்செல்வன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், ஒன்றிய செயலாளர் மணிமாறன் உள்ளிட்ட நிர்வாகிகள், துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.எம்.துரைசாமி

### ஆகஸ்ட் 1 (2020)



தனது இளமைக் காலம் முதல் கழகத்தில் ஈடுபாடு கொண்டு புழல் பகுதியில் கழக வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியவர்.

புழல் ஒன்றியச் செயலாளராகவும், ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட பொருளாளராகவும், அவைத்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

மூன்று முறை நாரவாரிகுப்பம் பேரூராட்சி மன்றத் தலைவராகவும், மூன்று முறைமாதவரம் நகர்மன்ற உறுப்பினராகவும் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். நெல்,அரிசி வியாபாரிகள் சங்கத் தலைவராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**